தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப.(ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

**ஆணை எண். 014/2021**

**நாள். 17.02.2022**

திரு V.P. சங்கர்,
மணப்பாறை – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
மணப்பாறை நகராட்சி,
திருச்சிராப்பள்ளி. – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, வாகைக்குளம் விஸ்தரிப்பு, ரிசர்வாயர் ரோடு.141/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு V.P.சங்கர் அவர்களது 27.02.2021 நாளிட்ட மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 01.03.2021 அன்று பெறப்பட்டு 014/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, வாகைக்குளம் விஸ்தரிப்பு, ரிசர்வாயர் ரோடு, 141/1 என்ற முகவரியில் வசிக்கும் முறையீட்டு மனுதாரர் திரு V.P.சங்கர் தன்னுடைய 27.02.2021 நாளிட்ட மனுவில் கீழ்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை நகராட்சி மூலம் பொதுமக்கள் அனைவருக்கும் குடிநீர் வழங்கும் அரசின் திட்டமான HSC Works –ன்படி குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கு (சுமார் 2800 வீடுகளுக்கு) கான்ட்ராக்ட் முறையில் வழங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி, நகராட்சியின் மூலம் கோருவதற்கு அரசின் அனுமதி கடிதம் எண்.549/2018/E1, நாள்.11.02.2019–ன் உத்தரவு படி

மணப்பாறை நகராட்சி ஆணையரால் கடந்த 22.02.2019ம் தேதி டெண்டர் அறிவிக்கப்பட்டது. மேற்படி 22.02.2019ல் டெண்டர் கோரப்பட்டதில் மொத்த தொகை ரூ.100 இலட்சம் ஆகும். ரூ.100 இலட்சத்தில் பணி செய்ய முதல் நிலை ஒப்பந்தக்காரர்தான் டெண்டரில் கலந்து கொள்ள முடியும் என்பது விதி. ஆனால் நகராட்சி விதிகளுக்கு மாறாக ஒரு ஐந்தாம் நிலை ஒப்பந்தக்காரர் டெண்டரில் கலந்து கொள்ளச்செய்து அவருக்கு பணி ஆணையும் வழங்கப்பட்டுள்ளது. இதில் விதி மீறல்கள் நடைபெற்றுள்ளது.

பொதுவாக நகராட்சி விதிகளின் படி எந்த தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோருகிறோமோ அந்த நாட்களுக்கு முந்தைய நாளில் எவ்வளவு ரூபாய்க்கு டெண்டர் நகராட்சியில் கோரப்படுகிறதோ அந்த தொகைக்கு ஒரு சதவீதம் Earnest Money Deposit தொகையானது டெண்டர் கோரப்பட்டுள்ள நாளுக்கு முந்தைய நாளில் அலுவலக நேரத்தில் Demand Draft– ஆகவோ அல்லது நகராட்சி கருவூலத்திலோ சம்பந்தப்பட்ட தொகை செலுத்தியிருந்தால்தான் சம்பந்தப்பட்ட நபர் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும் என்பது விதி. ஆனால் மணப்பாறை நகராட்சியில் நடைபெற்ற டெண்டரில் அப்படி ஏதும் நடைபெறவில்லை.

டெண்டர் கோரிய 22.02.2019ம் தேதிக்கு முந்தைய நாள் 21.02.2019ம் தேதி டெண்டர் கோரப்பட்டுள்ள மொத்த தொகை ரூ.100 இலட்சத்திற்கான பணிக்கு EMD தொகையானது ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) (1 சதவீதம்) நகராட்சியில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரால் செலுத்தப்படவில்லை. டெண்டர் தேதி முடிந்த பின் காலம் தாழ்த்தி 25.02.2019ம் தேதி தான் ஆக்ஸிஸ் வங்கியில் ரூ.1,00,000/– லட்சத்திற்கான (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) Demand Draft ஆணையர் அவர்கள் பெயருக்கு எடுத்து நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

மணப்பாறை நகராட்சியில் கடந்த 2019 பிப்ரவரி மாதம் நடைபெற்ற (HSC) சம்பந்தமான ஒப்பந்தப்புள்ளியில் THE TAMIL NADU TRANSPARENCE IN TENDERS RULES, 2000–ன் விதி 2–ல் Definitions குறிப்பிட்டபடி பத்தி (e)ல் " Two cover system " means a procedure under which the tenderers are required to simultaneously submit two separate sealed covers, one containing the Earnest Money Deposit and the details of their capability to undertake the tender which will be opened first and the second cover containing the price quotation which will be opened only if the tenderer is found qualified to execute the tender ".

விதிகளுக்கு புறம்பாக டெண்டரில் கலந்து கொள்ள செய்தும், முதல்நிலை ஒப்பந்தக்காரருக்கு பணி கொடுக்காமல், 4% அதிகம் கேட்டிருந்த ஐந்தாம் நிலை ஒப்பந்தக்காரருக்கு பணி உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரே நாளில் டெண்டர் கோரப்பட்டு, அதே நாளில் ஒப்பந்தக்காரரிடம் உறுதிமொழி பத்திரம் பெறப்பட்டும், அதே நாளில் மன்றப்பொருளும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக **(22.02.2019)** Work Order–ல் உள்ளன.

டெண்டரில் தகுதி இல்லாதவர்களை டெண்டரில் கலந்து கொள்ள செய்தது தவறு, அதிலும் மன்றப்பொருள் சம்பந்தமாகவும், ஐந்தாம் நிலை ஒப்பந்தக்காரருக்கு பணி வழங்க அனுமதி அளிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரின் அனுமதி ஏதும் கோரப்பட்டதாக தெரியவில்லை. இது சம்பந்தமாக உயர் அதிகாரிகளுக்கும் எவ்வித தகவலும் தெரிவித்ததாக தெரியவில்லை. இச்சம்பவம் தொடர்பாக தனி அலுவலர் மற்றும் நகர்மன்ற ஆணையர் (பொறுப்பு) என்ற அதிகாரத்தை தன் இஷ்டத்திற்கு தன்னிச்சையாக துஷ்பிரயோகம் செய்தும் ஐந்தாம் நிலை ஒப்பந்தக்காரருக்கு டெண்டர் உத்தரவு வழங்கப்பட வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் நகராட்சி உதவி பொறியாளர் மற்றும் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் ஆகியோர் செயல்பட்டுள்ளனர் என்பது தெளிவாக தெரிகிறது.

எனவே Work Order–ல் கொடுக்கப்பட்டுள்ள பத்தி–7ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி ஒப்பந்தகாரர் விதி மீறி நடந்தால் குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கும் அரசுவிதி தெரிந்தே, மேற்கண்ட தவறுகளை செய்த நகராட்சி உதவி பொறியாளர் மற்றும் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளருக்கும் பொருந்தாதா என்ற கேள்வி எழுகிறது. Work Order பத்தி –7ல் கீழ்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:–

" Fraudulent Practices: If it is found any time during the tender process, award of contract, or during the contract period, that the contractor has furnished false certificate or if the contractor, in the judgment of the Employer has engaged in corrupt or fraudulent practices in completing for, getting the contract or in the executing the contract, the contract will be summarily terminated and criminal proceedings will be initiated."

மேற்காணும் புகார்களை தெரிவித்த மனுதாரர் திரு V.P.சங்கர் இது சம்பந்தமாக உரிய விசாரணை செய்து நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படும் என்று தெரிந்தே தவறு செய்து, மீண்டும் நகராட்சி மூலம் மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதால் நகராட்சிக்கு ஏற்பட்ட செலவினத்திற்கும் காரணமாய் இருந்த நகராட்சி உதவி பொறியாளர் மற்றும் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் இவர்களால் தவறான வகையில் பணிசெய்ய அனுமதித்து முந்தைய ஒப்பந்தக்காரர் சுமார் 200

வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுத்த வகையில் ஒப்பந்தக்காரருக்கு நகராட்சி மூலம் வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு லட்சம் மட்டும்) நகராட்சி நிதி வழங்காமல் வேண்டுமென்றே தெரிந்தே தவறு செய்த நகராட்சி உதவி பொறியாளர் மற்றும் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் இவர்களிடம் வசூல் செய்து ஒப்பந்தக்காரருக்கு வழங்கவும், தக்க நடவடிக்கை எடுத்து நகராட்சிக்கு நிதி இழப்பை தவிர்க்குமாறும் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் அவரது முறையீடு குறித்து 02.09.2021 அன்று விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. இவ்விசாரணையின்போது மனுதாரர் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:–

திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை நகராட்சி மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு அரசின் திட்டத்தின்படி குடிநீர் குழாய் இணைப்புகளை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரருக்கு கொடுக்காமல் அதாவது வகுப்பு 1 ஒப்பந்ததாரருக்கு அளிக்காமல், தகுதி இல்லாத வகுப்பு 5 நிலையில் உள்ள ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளி நகராட்சி அலுவலர்களால் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்தப்புள்ளியுடன் டேவணித்தொகை வரைவோலையும் ஒப்பந்ததாரரால் ஒப்பந்தப்புள்ளியுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. இவை விதிகளுக்கு முரணானதாகும்.

ஒப்பந்ததாரர், மேற்கண்ட பணிகளை மேற்கொண்டு சுமார் 200 இணைப்புகளை அப்பகுதியில் கொடுத்துவிட்ட பின்னர், தகுதி இல்லாத ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற புகார்களின் அடிப்படையில் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி நகராட்சி அலுவலர்களால் ரத்து செய்யப்பட்டு பின்னர் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தகுதி இல்லாத ஒப்பந்ததாரருக்கு மேற்கண்ட ஒப்பந்தம் வழங்கப்பட்டு பின்னர் அவை நகராட்சி அலுவலர்களால் ரத்து செய்யப்பட்டுவிட்ட நிலையில் நகராட்சிக்கு இழப்பீடு தவிர்க்கப்பட்டுவிட்டது என்றாலும், மேற்கண்ட தவறு நடக்கக் காரணமான அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படியும் மன்றத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரின் மனு குறித்து எதிர்மனுதாரர்களில் ஒருவரான திரு. மனோகரன், மணப்பாறை நகராட்சியின் முன்னாள் உதவி பொறியாளர் (தற்போது

வேதாரண்யம் நகராட்சி பொறியாளர்) அவர்கள் 02.09.2021 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை நகராட்சி மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு அரசின் திட்டப்படி குடிநீர் குழாய் இணைப்புகளை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு இரண்டு முறை ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டது. ஆனால், யாரும் ஒப்பந்தப்புள்ளிகளை நகராட்சியில் சமர்ப்பிக்கவில்லை. மேற்கண்ட திட்டம் சிறப்புத் திட்டம் என்பதால் அவசரமாக திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திரு. அருள் சௌந்திரராஜன் என்கின்ற ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டு, வேலை உத்தரவு வழங்கப்பட்டது எனவும் இதில் எவ்வித உள்நோக்கமும் இல்லை.

மேலும் மனுதாரரிடமிருந்தும் மற்றும் பொதுமக்களிடமிருந்தும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக வரப்பெற்ற புகார்களையடுத்து, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, தற்போது அப்பகுதியில் பணிகள் நடைபெற்று வருகின்றன என தெரிவித்துள்ளார்.

4) முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுக்கள் குறித்து அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற 22.03.3021 நாளிட்ட அழைப்பாணை மூலம் மணப்பாறை நகராட்சி ஆணையாளருக்கு ஆணையிடப்பட்ட நிலையில் மணப்பாறை நகராட்சி ஆணையாளர் 08.10.2021 நாளிட்ட கடிதத்தில் தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். அவருடைய அறிக்கையில் மணப்பாறை நகராட்சியில் உள்ள குடிநீர் இணைப்பு இல்லாத 2877 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்திற்கு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண். 13277/2018/WS1 நாள்.19.06.2018–ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தலைமை பொறியாளர் (Chief Engineer) நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ந.க. எண்.13277/2018/DO2 நாள்.17.12.2018–ன்படி, தொழில் நுட்ப அனுமதி எண்.665/2018–2019–ன்படி, தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு பின்வரும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முதல் ஒப்பந்தப்புள்ளி: | 23.01.2019 (எவரும் கலந்து கொள்ளவில்லை) |
| மறு ஒப்பந்தப்புள்ளி | 13.02.2019 அன்று கோரப்பட்டு, நிர்வாக நலன் கருதி 21.02.2019 ஒத்திவைக்கப்பட்டது. |

அதனை தொடர்ந்து 21.02.2019–ல் பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு அருள்செளந்தர்ராஜ் | மதிப்பீட்டை விட | 4.96 சதவீதம் அதிகம் |
| 2. | திரு எஸ். சண்முகம் | மதிப்பீட்டை விட | 11.61 சதவீதம் அதிகம் |

இந்நகர்மன்ற தீர்மான எண்.536, நாள் 28.02.2019–ன்படி, திரு. அருள்செளந்தர்ராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு, மணப்பாறை நகராட்சி ஆணையாளர் ந.க. எண்.1149/2018/இ1, நாள் 28.02.2019–ன்படி, வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

4. இந்நிலையில் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதாக வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் ஆணையாளரால் ஆய்வு செய்யப்பட்டு, ஒப்பந்த விதிமுறைகளை முறையாக கடைபிடிக்கப்படவில்லையென தெரிவித்து மணப்பாறை நகர்மன்ற தீர்மான எண்.620, நாள்.04.10.2019–ன்படி, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. மணப்பாறை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ந.க. எண்.1049/2019/இ1, நாள்.11.12.2019–ன்படி, திரு. அருள்செளந்தர்ராஜ், ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்து தனியருக்கு சார்பு செய்யப்பட்டுள்ளது.

அதன்பின்பு விவரப்படி ஒப்பந்தப்புள்ளி அழைப்புகள் குறித்து, தமிழ்/ஆங்கிலம் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர்களில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

நகராட்சி ஆணையாளரின் ந.க. எண்.1149/2018/இ1, நாள். 14.10.2019–ன்படி, 30.10.2019, 08.11.2019 மற்றும் 03.12.2019 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 03.12.2019–ல் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தில் கலந்து கொண்டவர்களின் விவரம்

| வரிசை எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ஓம்சக்தி, கன்ஸ்ட்ரக்சன்ஸ், வேங்கைகுறிச்சி, மணப்பாறை | 10.36 % |
| 2. | திரு ஆனந்தன்,வலசுபட்டி, மணப்பாறை | 4.98% |

மேற்கண்டவாறு, ஒப்பந்ததாரர்களால் அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.ப.ஆனந்தன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை குறைத்து கொடுக்க ஆணையர் கோரியதன் அடிப்படையில் திரு.ப.ஆனந்தன், ஒப்பந்ததாரரின் 10.12.2019 நாளைய கடிதத்தின்படி, விலை விகிதம் 4.98%லிருந்து 4.76% ஆக குறைத்து கொடுக்கப்பட்டு, நகர்மன்ற தீர்மானம் எண்.681 நாள்.03.01.2020–ன்படி ஏற்றுக்கொள்ளப்பட்டு அவருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட திட்டப்பணிக்கு ஏற்கனவே முதல்முறை ஒப்பந்தப்புள்ளி கோரி எவரும் கலந்து கொள்ளாமல், 2–வது முறை ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதில் ஒப்பந்த விதிமுறைகளை முறையாக கடைபிடிக்கப்படவில்லையென தெரிவித்து இரத்து செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு 3 முறை ஒப்பந்தபுள்ளிகள் கோரி பெறப்பட்டு தற்போது மேற்கண்ட திட்டப்பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வில் மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் ஏற்பட்ட குறைபாடுகள் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டுள்ளது. இரத்து செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பணிகள் மேற்கொண்டதற்கான ஆவணங்கள் ஏதும் இல்லை மற்றும் ஒப்பந்ததாரருக்கு தொகை ஏதும் பட்டுவாடா செய்யப்படவில்லை.

தற்போது பணி மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையிலேயே பணி மேற்கொள்ளப்பட்டு வருவதில் மதிப்பீடு தொகையில் எவ்வித உயர்வும் (Revised Estimate) செய்யப்படவில்லை. இதனால் நிதியிழப்பு ஏதும் இல்லை.

புகார் மனுவில் தெரிவிக்கும் ஒப்பந்தப்புள்ளியில் ஏற்பட்ட குறைபாடுகளுக்கு ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

5. இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு, அவர் அளித்த வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் மற்றும் எதிர்மனுதாரர் திரு ப. மனோகரன், மணப்பாறை நகராட்சி முன்னாள் உதவி பொறியாளரிடம் பெறப்பட்ட வாக்கு மூலம், மணப்பாறை நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகளை பரிசீலனை செய்ததில் மனுவில் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்டுள்ள விதிகளுக்கு புறம்பான செயல்பாடுகள் நடைபெற்றுள்ளது உறுதியாகிறது:–

(i) As per G.O. (ms) No.222, Public Works (G2) Department, Dated 08.04.1999ன்படி ரூ.75 லட்சம் மற்றும் அதற்கு மேல் உள்ளவர்களை முதல்நிலை ஒப்பந்ததாராக பதிவு செய்ய தகுதி உடையவர் ஆகிறார். அதன்படி ரூ.100 லட்சம் (ரூபாய் நூறு இலட்சம் மட்டும்) பணி செய்ய முதல் நிலை ஒப்பந்ததாரர்தான் டெண்டரில் கலந்து கொள்ள வேண்டும் என்பது அரசு விதி. ஆனால் அரசு விதிகளுக்கு மாறாக ஐந்தாம் நிலை ஒப்பந்ததாரர் டெண்டரில் கலந்து கொண்டுள்ளார் என்பது உறுதியாகிறது.

(ii) டெண்டர் கோரிய **22.02.2019**ம் தேதிக்கு முந்தைய நாள் **21.02.2019**ம் தேதி டெண்டர் கோரப்பட்டுள்ள மொத்த தொகை ரூ.100 லட்சத்திற்கான பணிக்கு Earnest Money Deposit தொகையானது ரூ.1,00,000/–(ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) (1 சதவீதம்) நகராட்சியில் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரால் செலுத்தப்படவில்லை. மாறாக டெண்டர் தேதி முடிந்த பின் காலம் தாழ்த்தி **25.02.2019**ம் தேதி தான் ஆக்ஸிஸ் வங்கியில் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) தொகைக்கான Demand Draft ஆணையர் அவர்கள் பெயருக்கு எடுத்து நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

(iii) ஐந்தாம் நிலை ஒப்பந்ததாரர்கள் ரூபாய் பத்து லட்சத்துக்குள் உண்டான பணிகளை மட்டும்தான் செய்ய வேண்டும் என்பது அரசு விதிமுறையாகும். ஆனால் விதிகளுக்கு புறம்பாக ஐந்தாம் நிலை ஒப்பந்ததாரரை டெண்டரில் கலந்து கொள்ளச் செய்தும், முதல் நிலை ஒப்பந்ததாரருக்கு பணி கொடுக்காமல், 4% அதிகம் கேட்டிருந்த ஐந்தாம் நிலை ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியது.

(iv) ஒரே நாளில் டெண்டர் கோரப்பட்டு, அதே நாளில் ஒப்பந்தகாரரிடம் உறுதிமொழி பத்திரம் பெறப்பட்டும், அதே நாளில் மன்றப்பொருளும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக (22.02.2019) Work Order-ல் உள்ளன. ஒரே நாளில் அவ்வளவு பணிகளையும் அவசர அவசரமாக செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

**6.** விதிகளுக்கு புறம்பாக ஐந்தாம் நிலை ஒப்பந்தக்காரருக்கு ரூபாய் நூறு லட்சம் பணிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்ட நிலையில் ஒப்பந்தப்புள்ளியில் குறைபாடு ஏற்பட்டுள்ளதாக வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதால் ஒப்பந்தப்புள்ளி வழங்கியதில் முறைகேடு நடந்துள்ளது என்பது ஊர்ஜிதமாகிறது. எனவே விதிமுறைகளுக்கு மாறாக செயல்பட்ட அனைத்து சம்மந்தப்பட்ட

அதிகாரிகள் மீதும் துறை ரீதியான கடும் ஒழுங்கு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

"The Director of Municipal Administration is advised to gear up the machinery of R.D.M.As in the Districts to oversee floating of Tenders in adherence to the rules in force by the Municipalities in their jurisdiction so as to prevent misadventure and motivated malafide acts such as this occurrence. Had the area RDMA been sensitive and duty-conscious in his jurisdiction this issue would not take arisen. The Municipal Commissioners, Engineers and the other officials involved in this First Tender episode should be chargesheeted under severe provisions and punished substantially in order to send a moral massage to the other officials that wrongs committed wilfully would be dealt with an iron hand".

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17–ம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு V.P.சங்கர்,
141/1, ரிசர்வாயர் ரோடு,
வாகைகுளம் விஸ்தரிப்பு
மணப்பாறை–621 306, திருச்சி மாவட்டம்.

2) ஆணையாளர்,
மணப்பாறை நகராட்சி,
மணப்பாறை, திருச்சி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்.
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

17/2/22.

செயலாளர்.

17.2.2022

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032